ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2000/80 - 2017 ජනවාරි මස 06 වැනි සිකුරාදා - 2017.01.06

2000/80 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறிப்பு இல. : 3/3/6/2/29.

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/9/2013/WS/460

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

பாரிய மாத்தளை நீர் வழங்கல் செயற்திட்டத்தின் உடதென்ன புதிய நீர் சுத்திகரிப்பகம் அமைப்பது தொடர்பாக காணித் துண்டொன்றினை சுவீகரித்தல்.

எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் பின்வருமாறு. - மத்திய மாகணத்தில் மாத்தளை மாவட்டத்தில் உக்குவளை பிரதேச செயலகப் பிரிவில் மாத்தளை உடசியபத்துவ பிரிவில் உடதென்ன கிராம அலுவலகப் பிரிவில் வராப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள மாத்தளை சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இலக்க மா. 1687 இல் துண்டு இலக்கம் 01 இனால் காட்டப்பட்டுள்ள சுமார் ஹெக்டயார் 0.0433 விஸ்தீரணமுடைய காணித்துண்டு.

**காணித் துண்டு இல. 1**

காணியின் பெயர்: ரத்வத்தவத்த; உரிமை கோருவோர்: ஆர். ஆர். யூ. குருப்பு, இல. 30/1, உடதென்ன மாத்தளை.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுதில் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு, உக்குவலை பிரதேச செயலகத்தில் என் முன் தோன்றும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஈ. டப்ளிவ். என். ஏ. எகொடவெல,
பிரதேச செயலாளர்,
உக்குவலை.

பிரதேச செயலகம்,
உக்குவலை,
2016, திசெம்பர் 23.

01 - 652

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல. : பா/இ/2/அத்/15.

காணி அமைச்சின் குறிப்பு இல : 4-3/6/2013/எச்டப்ளிவ்/467.

2016, திசெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1998/24 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலின் கீழ் எழுத்தாவணம் கையளிக்கப்பட வேண்டிய திகதி 2017.01.20 என திருத்தம் செய்யப்பட வேண்டும்.

மேலும், 1 ஆம் பகுதியின் படி மொத்த விஸ்தீரணத்தின் ஹெக்டயார் 0.9193 என திருத்தம் செய்யப்பட வேண்டும். இல. 461 சீ- பஹல பாதுக்கை கிராம அலுவலர் பிரிவும், மேற்படி கிராம அலுவலர் பிரிவில் உள்ளடக்கப்பட வேண்டும்.

எஸ். எச். ஹேவகே,
பிரதேச செயலாளர்,
பாதுக்கை.

பிரதேச செயலகம்,
பாதுக்கை,
2017, சனவரி 05.

01 - 653